**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2024 |
| Name | : Srinivasa Sambath |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2025

**எதிரிகள் 1 முதல் 12 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொள்ளாச்சியில் வசிக்கிறேன். இந்து சமய அறநிலையத் துறையில் செயல் அலுவலராக பணியில் உள்ளேன். 18.12.2019 ம் தேதி மாலை 06.00–06.30 மணி அளவில் உடுமலைப்பேட்டை பிரசன்ன விநாயகர் திருகோவில் அலுவலகத்தில் நான் இருந்த போது துங்காவி மலையாண்டிபட்டிணத்தில் அருள்மிகு கரிய வரதராஜ பெருமாள் திருக்கோவில் குழு கோவிலுக்கு சம்மந்தப்பட்ட மொத்தமுள்ள 48 ஏக்கரை நாங்கள் ஏலம் விட்டிருந்தோம் க.ச.238/3 ல் உள்ள ராசப்பன் எனக்கு போன் செய்து திருக்கோவிலுக்கு சொந்தமான நிலத்திற்குள் அத்து மீறி சென்று பட்டா வேண்டும் என்று கோஷம் போடுவதாக சொன்னார். நானும், எனது கணக்கர் சரவணன் என்பவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம் அங்கே சுமார் 200 பேர் கும்பலாக இருந்தார்கள். எங்களுக்கு இடம் இல்லை பட்டா வேண்டும் என்று கோஷம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் திருக்கோவிலுக்கு சொந்தமான நிலம் பட்டா தர முடியாது என்று சொன்னேன். கும்பலில் இருந்தவர்கள் என்னை ஆக்ரோஷமாக மிரட்டினார்கள். ராசப்பன் என்பவரிடம் கேட்ட போது அவர்

சொன்ன 11 நபர்கள் மீது நான் மறு காலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் எழுதி கையொப்பம் போட்டேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மதமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்று என்னால் குறிப்பாக சொல்ல இயலாது என்றால் சரிதான். ராசப்பன் என்பவர் சொன்னதன் பேரில் தான் புகாரில் எதிரி விவரங்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ராசப்பன் என்பவரது ஏல காலம் ஒரு வருடம். பொதுவாக கோவில் நிலத்தில் ஏலம் எடுப்பவர்கள் மானாவரி பயிர்கள் தான் நடவு செய்ய வேண்டும் என்றும் நீண்ட கால பயிர்கள் நடவு செய்யக்கூடாது என்றால் சரிதான். ராசப்பன் என்பவர் ஏலம் எடுத்த நிலத்தில் ஏல காலம் முடியும் தருவாயில் தென்னை கன்றுகள் நட்டதாக ஊர் மக்களுக்கும் அவருக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதனால் ராசப்பன் தன்னிடம் பிரச்சனை செய்தவர்கள் பழி வாங்க வேண்டும் என்று இல்லாத நபர்கள் இருந்ததாக பொய்யாக என்னிடம் தகவல் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

> இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..
>
> Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
>
> மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
>
> மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2024 |
| Name | : Saravanan |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2025

**எதிரிகள் 1 முதல் 12 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டையில் வசித்து வருகிறேன். பிரசன்ன விநாயகர் கோவிலில் கணக்கராக வேலை செய்கிறேன். அ.சா.1 யை தெரியும் செயல் அலுவலர். 18.12.2020 ம் தேதி மாலை சுமார் 06.30 மணி அளவில் நாங்கள் அலுவலகத்தில் இருந்தபோது ராசப்பன் என்பவரிடமிருந்து போன் வந்தது திருக்கோவில் நிலத்தில் பட்டா கேட்டு நிறைய கும்பலாக உள்ளார்கள் என்று சொன்னார். நானும், செயல் அலுவலரும் அங்கு சென்றோம். நிறைய நபர்கள் இருந்தார்கள். பட்டா கேட்டு பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். திருக்கோவில் நிலம் என்பதால் பட்டா கொடுக்க இயலாது என்று செயல் அலுவலர் சொன்னார். அதற்கு அங்குள்ளவர்கள் சத்தம் போட்டு செயல் அலுவலரை மிரட்டி பிரச்சனை செய்தார்கள். அது குறித்து மறு நாள் காலை செயல் அலுவலர் கணியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்று என்னால் குறிப்பாக சொல்ல இயலாது என்றால் சரிதான். ராசப்பன் என்பவர் சொன்னதன் பேரில் தான் புகாரில் எதிரி விவரங்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ராசப்பன் என்பவரது ஏல காலம் ஒரு வருடம். பொதுவாக கோவில் நிலத்தில் ஏலம் எடுப்பவர்கள் மானாவரி பயிர்கள் தான் நடவு செய்ய வேண்டும் என்றும் நீண்ட கால பயிர்கள் நடவு செய்யக்கூடாது என்றால் சரிதான். ராசப்பன் என்பவர் ஏலம் எடுத்த நிலத்தில் ஏல காலம் முடியும் தருவாயில் தென்னை கன்றுகள் நட்டதாக ஊர் மக்களுக்கும் அவருக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதனால் ராசப்பன் தன்னிடம் பிரச்சனை செய்தவர்கள் பழி வாங்க வேண்டும் என்று இல்லாத நபர்கள் இருந்ததாக பொய்யாக என்னிடம் தகவல் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்